ஆண்டுக்கு நான்கு முறை மாநகராட்சி - நகராட்சி- பேரூராட்சிகளில்

# ஏரியா சபைக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மே 25 - தமிழக முதலமைச்சர் அவர்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏரியா சபைகளின் கூட்டங்களை ஆண்டுதோறும், தேசிய வாக்காளர் தினமான ஜனவரி 25-ஆம் நாள், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினமான ஏப்ரல் 14-ஆம் நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 15-ஆம் நாள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10-ஆம் நாள் ஆகிய நான்கு தினங்களில் நடத்திட வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள்**

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்தில் மக்கள் பங்கேற்பினை உறுதி செய்யும் விதமாக, அவ்வமைப்புகளின் வார்டுகள் ஒவ்வொன்றையும், பகுதிகளாக (Areas) பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும், ஏரியா சபையை (Area Sabha) உருவாக்கும் வகையில், 2010ஆம் ஆண்டு அப்போதைய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டங்களில் உரிய வகைமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், அந்த சட்ட திருத்தங்களின் கீழ்,2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபை விதிகள் வெளியிடப்பட்டன.

அரசு, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்தை மேலும் செம்மைப்படுத்துவது தொடர்பாக மேற்கொண்டு வரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, ஏரியா சபைகளை அமைத்து நடை முறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி, தமிழ்நாட்டின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், முதல் முறையாக, கடந்த 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள், ஏரியா சபை கூட்டங்கள் நடத்தப்பெற்றன. இவற்றில், பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம் தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்திலும், 2023-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளிலும், மக்கள் தொகையின் அடிப்படையில், மாநகராட்சிகளில் ஒவ்வொரு வார்டையும் நான்கு முதல் பத்து பகுதிகளாகவும், நகராட்சிகளில் நான்கு பகுதிகளாகவும் மற்றும் பேரூராட்சிகளில் மூன்று பகுதிகளாகவும் (Areas) பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஏரியா சபைகளை அமைக்கவும் மற்றும் ஏரியா சபைகளின் கூட்டங்களை நடத்துவது தொடர்பாகவும் தேவையான வகைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விதிகளின் 18ல்வது விதியின்படி, ஏரியா சபைக் கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, அதாவது, வருடத்திற்கு நான்கு முறை நடத்தப்படல் வேண்டும்.

இதன்படி, முதலமைச்சர் அவர்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏரியா சபைகளின் கூட்டங்களை, ஆண்டுதோறும், தேசிய வாக்காளர் தினமான ஜனவரி 25-ஆம் நாள், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தினமான ஏப்ரல் 14-ஆம் நாள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 15-ஆம் நாள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10-ஆம் நாள் ஆகிய நான்கு தினங்களில் நடத்திட வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி, கிராம சபை கூட்டங்கள், ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாட்களில் நடத்தப்பட்டு வருவதைப் போன்று, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், ஏரியா சபைக் கூட்டங்கள், வருடத்திற்கு நான்கு முறை நிர்ணயிக்கப்பட்டுள்ள நாட்களில் நடத்தப்படவும், இக்கூட்டங்களில் பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டு தங்கள் பகுதியின் அடிப்படை வசதி தேவைகள் குறித்து தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்ளவும், தங்கள் பகுதியின் வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்கவும், மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்தில் மக்கள் பங்கேற்பினை உறுதி செய்யவும், அடித்தட்டு ஜனநாயகத்தை வலுப்பெறச் செய்யவும் ஏதுவாகிறது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

கடலூர் கிழக்கு மாவட்டக்

# கழக செயற்குழுக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம், 30.5.2023 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில், வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் து.தங்கராசு தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் மாவட்டஇளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர்அணி, மீனவரணி, நெசவாளர்அணி, விவசாயஅணி, விவசாயத் தொழிலாளர் அணி, பொறியாளர்அணி, மருத்துவர்அணி, வர்த்தகர்அணி, ஆதிதிராவிடர்நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு, தகவல்தொழில்நுட்பபிரிவுஅணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசாரா தொழிலாளர் அணி, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவது சம்பந்தமாக.

ஜூன் 3 வடசென்னையில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வது சம்பந்தமாக.

ஜூன்20 ஆம்நாள் திருவாரூரில் "கலைஞர்கோட்டம்" திறப்புவிழா பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் திறந்து வைத்துச் சிறப்பிக்க உள்ளார். இந்த விழா முழுநாள் நிகழ்வாகக் கவியரங்கம், பட்டிமன்றம் பொதுக்கூட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுடன் நடைபெற இருப்பதால் இதில் கலந்துகொள்வது சம்பந்தமாக.

ஜூன் 3 அன்று கிளைக் கழகங்கள் தொடங்கி, அனைத்து அமைப்புகளின் சார்பிலும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை வைத்து கழக தோழர்கள் அனைவரும் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செய்திடுவது சம்பந்தமாக.

ஜூன் 3 பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கிளைக் கழகங்கள் தோறும் கொடியேற்றி, பொதுக்கூட்டங்கள் நடத்தி, தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடத்தியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கொண்டாடுவது சம்பந்தமாக.

உறுப்பினர் சேர்க்கை முழுமைப்படுத்துதல் சம்பந்தமாக.

இளைஞரணி சார்பாக தெருமுனைப் பிரச்சாரக்கூட்டம் நடத்துவது.

கழக ஆக்கப்பணிகள்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

# 25 ஆயிரம் இடங்களில் வளரிளம் பருவத்தினருக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 24- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (23.05.2023) தமிழ்நாடு முழுவதும் வளரிளம் பருவத்தினருக்கான 25,000 விழிப்புணர்வு மற்றும் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தும் வகையில் சென்னை, சைதாப்பேட்டை, பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார். பின்னர் ஆற்றிய உரை வருமாறு:-

கடந்த 2 மாதங்களுக்கு முன்னாள் தமிழ்நாட்டில் நிதிநிலை அறிக்கை நிறைவேற்றப்பட்டது. அந்த நிதிநிலை அறிக்கையில் துறைகள் வாரியாக இந்த ஆண்டு முழுவதும் செயல்படுத்திட வேண்டிய திட்டங்கள் குறித்தான அறிவிப்புகள் வெளியிடப்பட்டது. அந்த வகையில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் முதலாம் ஆண்டில் 110 அறிவிப்புகளும், இரண்டாம் ஆண்டில் 136 அறிவிப்புகளும் வெளியிடப்பட்டது.

இந்த அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டு, அறிவிப்புகள் குறித்த புத்தகங்கள் வெளியிடப்பட்டு தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை வரலாற்றில் ஒரு துறையின் சார்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் எல்லாம் எத்தகைய வகையில் செயல்படுத்தப்பட்டது என்பது புத்தகமாகவே அச்சிட்டு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.

அந்த வகையில் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 106 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் மிக முக்கியமான அறிவிப்பாகவளரிளம் பருவத்தினர் நல்வாழ்வை மேம்படுத்திடும் வகையில் 25,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாதத்திற்கு ஒரு முகாம் என்கிற வகையில் நடத்தப்படும்என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி இன்று சைதாப்பேட்டை, பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 500 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இச்சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த முகாம்களில் 10 முதல் 19 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினரான மாணவ மாணவியருக்கு சுகாதார ஆலோசனைகள், விழிப்புணர்வு மற்றும் இரத்த சோகைக்கான பரிசோதனைகள் உள்ளிட்ட அனைத்து சிறப்பு பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.தமிழ்நாட்டில் இரத்த சோகை பாதிப்பை பொறுத்தவரை வளரிளம் பெண்களுக்கு 52.9%, வளரிளம் ஆண்களுக்கு 24.6% கண்டறியப்பட்டுள்ளது. ஆகையால் இரத்த சோகை பாதிக்கப்பட்ட வளரிளம் பருவத்தினர்களை கண்டறிந்து 20 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சை வழங்குவதுடன் இரத்த சோகை இல்லா தமிழ்நாடாக மாற்றுவதே இச்சிறப்பு முகாமின் நோக்கமாகும். தமிழ்நாடு முழுவதும் உள்ள 2127 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு மாதத்திற்கு ஒரு முகாம் வீதம் 25,524 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள 1.2 கோடி வளரிளம் பருவத்தினர் பயனடைவார்கள். இதில் பள்ளி மற்றும் பள்ளி செல்லா வளரிளம் பருவத்தினரும் அடங்குவர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன்முறையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

### கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்

இந்த துறையில் முதலாம் ஆண்டு வருமுன் காப்போம் என்ற திட்டம், ஒன்றியத்திற்கு 3 மருத்துவ முகாம்கள், ஒவ்வொரு மாநகராட்சிக்கும் 4 முகாம்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களுக்கு 15 முகாம்கள் என 1,250 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1,260 முகாம்கள் முதலாம் ஆண்டு நடத்தப்பட்டது. அதே போல் கடந்த ஆண்டு 1,250 நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1,532 முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்

### முன்னோடி திட்டங்கள்

2006-ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, பீகாரில் சானிடரி நாப்கின் மிகவும் அழுக்கான துணிகளையும், கோணிப்பைகளையும் பயன்படுத்தி 4 இளம்பெண்கள் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்தார்கள் என்ற செய்தி பத்திரிக்கைகளில் வெளியானது. அப்போது நடைபெற்ற பட்ஜட் மீதான விவாதத்தில்நான் மேயராக பெறுப்பேற்றிருந்த அந்த சமயத்தில், தற்போதைய முதலமைச்சர் அவர்கள் அந்த நேரத்தில் துணை முதலமைச்சராக இருந்தபோது, அவருடைய அறிவுறுத்தலை பெற்று 65 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இலவசமாக சானிடரி நாப்கின் கொடுக்கும் திட்டம் கொண்டு வரலாம் என்று யோசனையை தெரிவித்தேன். ஆனால் இது மிகவும் உணர்ச்சிப்பூர்வமான விஷயம் என்பதால் இந்த திட்டம் செயல்படுத்த வேண்டாம் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது. உடனடியாக இந்த திட்டத்தை அன்றைய துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உயர் அதிகாரிகள் கொண்டு சென்றனர். உடனடியாக இந்த திட்டத்திற்கு அன்றைய துணை முதலமைச்சர் அவர்கள் அனுமதி தந்து கொண்டுவரச் சொன்னார்கள். இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை மாநகராட்சி சார்பில் இந்தத் திட்டத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வந்தோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களுக்கு தேவை யான முன்னோடியான திட்டங்களை கொண்டு வரும் வகையில், இன்று வளரிளம் பருவத்தினருக்கு விழிப்புணர்வு மற்றும் சிறப்பு மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை மாணவ மாணவிகள் பின்பற்றும் போது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் முன்னிலையில் மருத்துவரின் அறிவுறைப்படி மருந்து மாத்திரைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் ஊட்டியில் இரும்புச் சத்து மாத்திரைகளை அதிக அளவில் ஒரு மாணவி எடுத்துக்கொண்டதால், உடல் நலம் பாதிக்கப்பட்டார். எனவே ஆசிரியர்கள் அல்லது பெற்றோர்கள் முன்னிலையில் மாணவர்கள் மருத்துவர்கள் வழிகாட்டுதலின்படி மாத்திரைகளை மிக கவனமாக உட்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, துணைமேயர் மு. மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர். ஜெ.இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், நிலை குழுத்தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர். ஜி.சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. பத்மஜா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

அமைச்சர்கள் எஸ். ரகுபதி - சிவ.வீ.மெய்ய நாதன் முன்னிலையில்

# ஆர்.ரெத்தினவேல் - பிரகதா இல்ல மண விழா வரவேற்பு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!



புதுக்கோட்டை மே 25 - முதலமைச்சர்,தலைவர்தளபதி அவர்கள் நல்வாழ்த்துகளுடன், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுக்கா, கல்லாலங்குடி தலைவர்ஆர்.ரெத்தினவேல் ஒன்றிய கவுன்சிலர் பிரகதா ஆகியோர் இல்ல திருமண வரவேற்பு விழா, கல்லாலங்குடி ராஜபாக்கியம் மண விழா அரங்கில் (ரீகுரு ராகவேந்திர திருமண மஹால் எதிரில்) இன்று (25.5.2023 - வியாழக்கிழமை) மாலை 5.30மணிமுதல்இரவு9மணி வரை நடைபெறுகிறது.

விழாவில் இளைஞர் நலன்,விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மணமக்கள் டாக்டர்ஆர்.வெங்கடேசன் டாக்டர் ஆர்.மோனிஷா ஆகியோரை வாழ்த்துகிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா, தெற்கு மாவட்ட கழகசெயலாளர் கே.கே.செல்லபாண்டியன்,எஸ்.திருநாவுக்கரசு எம்பி,கம்பன் கழகத் தலைவர் எஸ்.ராமச்சந்திரன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, எம்.எம்.அப்துல்லாஎம்பி,முன்னாள்சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசு, மாநில இலக்கிய அணி துணைத்தலைவர்கவிச்சுடர்கவிதைப் பித்தன்,மாநில மருத்துவரணி துணை செயலாளர் டாக்டர் ஆர்.அண்ணாமலை,மாநிலவர்த்தகஅணி செயலாளர் காசி. முத்துமாணிக்கம்ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் மாநில, மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் த.சந்திர சேகரன், அரு.வீரமணி, இ.ஏ.பரணிகார்த்திகேயன், சுப.சரவணன்,என்.அசோக் பாண்டியன், கேஆர்என். போஸ், தென்னலூர் எம். பழனியப்பன், உதயம் சண்முகம், பொன்.துரை,மிசா ஆறுமுகம்,செந்தில் திலகவதி,ஆர்.நாராயணன்,

த.வள்ளியம்மைதங்கமணி, ஞான.இளங்கோவன், கீரை.தமிழ்ராஜா, கே.எஸ்.ரவி, பொன்.ராமலிங்கம், சக்தி ராமசாமி, பொன்.கணேசன், அ. அடைக்கலமணி,தவ.பாஞ்சாலன்,அழகு(எ)சிதம்பரம், வெ.முத்துகிருஷ்ணன், இரா.ஆனந்த், கேஎஸ்.சந்திரன், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் கீழாத்தூர் ரெ.தங்கம், ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கேபி கேடி.தங்கமணி, ஒன்றிய செயலாளர் அரு.வடிவேலு நன்றி கூறுகின்றனர்.

---

# தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

## செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் வருகிற 27-05-2023 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.5.2023

**டாக்டர் சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

---

அமைச்சர் இ.பெரியசாமி சிறப்புரை

# திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - இ.பி.செந்தில்குமார் அறிக்கை!





திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் வருகிற 30.05.2023, செவ்வாய்க்கிழமை, காலை10.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான இ.பெரியசாமி சிறப்புரையாற்ற, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் மூ.காமாட்சி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அவைத் தலைவர் தி.மோகன் ஆகியோரின் தலைமையில் திண்டுக்கல், ரவுண்ட் ரோடு, நாயுடு மஹாலில் நடைபெறவுள்ளது.

அது சமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளுடைய மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நகர மன்றத் தலைவர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள்,பேரூராட்சி மன்றத் தலைவர்கள், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள்:**1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும் அவர்படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் திண்டுக்கல் மாவட்டத்தில் எங்கெங்கும் நடத்துவது சம்பந்தமாக. 2. கழகஉறுப்பினர்சேர்த்தல். 3. கழகஆக்கப் பணிகள்.

**அர.சக்கரபாணி**
செயலாளர்
திண்டுக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.

**இ.பி.செந்தில்குமார்**
செயலாளர்
திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

# தி.மு.க. வர்த்தகர் அணி கலந்தாலோசனைக் கூட்டம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 28.5.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.5.2023

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

---

# கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிக்கை!



கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் இன்று (25.05.2023 - வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) தளபதி கூட்ட அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவிராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் / பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
2. கழக வளர்ச்சி பணிகள்

**வி.செந்தில்பாலாஜி**
செயலாளர்
கரூர் மாவட்ட தி.மு.க.
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்